தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலையிதழ்



வாழ்நாள் சிறியது; வாழ்க்கையோ பெரிது!

என்றும் நினைத்திரு;
இந்நிலம் பெரிது!
குன்றமும் வானும்
கோடி ஆண்டுகள்
நின்று நிலைப்பன!
நீயோ அழிபவன்!
என்றும் இருப்பதாய்
இறுமாந்து விடாதே!

ஒருநாள் நம்முடல்
உலகினில் அழியும்!
திருநாள் போலத்
திரிந்த வாழ்வெலாம்
இருளுள் மூழ்கும்;
இல்லாமற் போவோம்!
அருமை உறவினர்
அழ அழ அழிவோம்!

[தொடர்ச்சி: அடுத்த பக்கம்]

குரல்: 7
இசை: 3

விலை
25 காசு.

[முகப்புப் பாடல் தொடர்ச்சி]

பிறப்பன எல்லாம்
பின்னொரு நாளில்
இறப்பதும் உறுதி!
இதுவே இயற்கை!
மறப்பிலா இந்நிலை
மனத்தினுள் இறுத்திச்
சிறப்புற எண்ணவும்
செய்யவும் முனைக!

உன்புது வாழ்வை
உவப்புடன் நடத்து!
அன்பும் அறமுமே
அனைத்தினும் உயர்வாம்!
இன்பம் வருகையில்
எக்களிப் புறாதே!
துன்புற நேரினும்
துவண்டு விடாதே!

ஒருநலம் பெறுகையில்
உலக நலம் நினை!
வருநலம் யாவும்
வகுத்துண்டு மகிழ்வாய்!
பெருநிலம், விளைவுகள்,
பிறவெலாம் பொதுவே!
மருவிலா உள்ளமும்
வாழ்வுமே மகிழ்ச்சி!

வாழ்நாள் சிறியது;
வாழ்க்கையோ பெரிது!
வீழ்நாள் வரினும்
வீழாது நற்செயல்!
தாழ்வும் உயர்வும்
தம்தம் செயல்களே!
சூழ்வன மீறிச்
சுடர்வன செய்வாய்!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–7.–தி. பி. ௨௲௪. கன்னி–துலை (அக்–நவ 73)–இசை–3.

அன்பும் அறிவும்-7.

முன் கட்டுரையில் காண்கின்றவர் காணப்படுகின்றவர் ஆகிய இருவர்க்கும் நான்கு வகை நுண்ணுணர்வு நிலைகள் உள்ளன என்றும், அவர்கள் இருவரும் பால்வேறுபட்டிருப்பாராயின் எட்டு இணையுணர்வு நுண்ம நிலைகள் உள்ளன என்றும் கண்டோம். (சென்ற இதழில் ஆறு என்று அச்சாகியுள்ளது. திருத்திக் கொள்க). அந்நிலைகளைக் கீழ்வரும் பொருத்துகளால் நன்கு விளங்கிக் கொள்க.

காண்பவர்.		காணப்படுபவர்.
ஆண்	—	ஆண்.
பெண்	—	பெண்.

குறைந்த அறிவு—இணைய விரும்புவது—குறைந்த அறிவு.
நிறைந்த அறிவு—இணைய விரும்புவது—நிறைந்த அறிவு.
குறைந்த அன்பு—இணைய விரும்புவது—குறைந்த அன்பு.
நிறைந்த அன்பு—இணைய விரும்புவது—நிறைந்த அன்பு.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்

ஆண்	—	பெண்.
பெண்	—	ஆண்.

குறைந்த அறிவு—இணைய விரும்புவது—குறைந்த அன்பு
(அல்லது)-நிறைந்த அறிவு.

நிறைந்த அறிவு—இணைய விரும்புவது—நிறைந்த அன்பு
(அல்லது)-குறைந்த அறிவு.

குறைந்த அன்பு—இணைய விரும்புவது—குறைந்த அறிவு
(அல்லது)-நிறைந்த அன்பு.

நிறைந்த அன்பு—இணைய விரும்புவது—நிறைந்த அன்பு.
(அல்லது)-குறைந்த அறிவு.

—இவ்வெதிர் விரும்பு நிலைகள் சில சூழ்நிலைத் தாக்குதல்களால் ஒரோவொருகால் திரிந்து மாறுபடுவதும் உண்டு.

எனவே, இதுகாறுங் கூறிய அன்பு, அறிவு ஆகிய இருவகை நுண்ம நிலை உணர்வுகளின் தன்மைகளை, இறுதியாகக் கீழ்வரும் ஒப்புமை நிலைகளால் தெற்றென விளங்கிக் கொள்ளலாம்.

அறிவு.	அன்பு.
1. ஆண்மை உணர்வினது.	1. பெண்மை உணர்வினது.
2. கூர்த்துப் பாயும் தன்மையது.	2. பரந்து பாயும் தன்மையது.
3. நெருப்புப் போன்றது; சூடானது.	3. தண்ணீர் போன்றது; குளிர்ச்சியானது.
4. மனவுணர்வின் ஒரு முனை.	4. மனவுணர்வின் மறுமுனை.
5. அன்பை அவாவும்.	5. அறிவை அவாவும்.
6. பெண்மையை வேட்கும்.	6. ஆண்மையை வேட்கும்.
7. புறம் நோக்கித் தாவும்.	7. அகம் நோக்கி ஒடுங்கும்.
8. மறவுணர்வையும், பொருளையும் பற்றும்.	8. அறவுணர்வையும் இன்பத்தையும் பற்றும்.
9. பூதவியக்கத்தில் விசும்பு போன்றது.	9. பூதவியக்கத்தில் நிலம் போன்றது.
10. அறிவுக்குறைவே அன்பு நிறைவைக் குறைவாகக் கொள்ளும்.	10. அன்புக் குறைவே அறிவு நிறைவைக் குறைவாகக் கொள்ளும்.
11. அறிவு மிகுதியே அன்புக் குறைவை நிறைவாகக் கொள்ளும்.	11. அன்பு மிகுதியே அறிவுக் குறைவை நிறைவாகக் கொள்ளும்.
12. அறிவற்ற உயிர்த் தோற்றமே இல்லை.	12. அன்பற்ற உயிர்த் தோற்றமே இல்லை.

13. அறிவு அடுத்துக் காணுவது அன்பு.

14. அறிவுக்கு மூன்று வினை:
  1. வெளிப்படுத்தல்.
  2. காத்தல்.
  3. நிலைப்படுத்தல்.

15. அறிவுக்கு மூன்று நிலை:
  1) ஒன்றை அறிதல்.
  2) ஒன்று போல் அறிதல்;
  3) ஒன்றால் அறியப்படுதல்.

16. முன்நிலைத் தூண்டுதல் உடையது. (ஒருவரிடம் ஒருவகை அறிவுணர்வு தோன்றினால், அவர்க்கு முன் உள்ளவரிடமும் அதற்கிணையான அறிவுணர்வைத் தூண்டுகின்றது).

17. கீழிருந்து மேல் எழும்பும் தன்மையது.

18. 1) அறிவுக்கு ஆண்மை, வீரம், துணிவு, விடாப்பிடி, போர்மை (பற்றல் குணம்), ஆக்கலுணர்வு முதலியன மேனிலைத் துணையுணர்வுகள். இவை அறிவின் எடுத்தல் குணங்கள் எனப்படும்.

2) சினம், பொறாமை. பொருள்அவா, அழித்தல்-உணர்வு, மறவெழுச்சி முதலியன கீழ்நிலைத் துணையுணர்வுகள். இவை அறிவின் படுத்தல் குணங்கள் எனப்படும்.

13. அன்பு அடுத்துக் காணுவது அறிவு.

14. அன்புக்கும் மூன்று வினை.
  1. வெளிப்படுத்தல்.
  2. காத்தல்.
  3. நிலைப்படுத்தல்.

15. அன்புக்கும் மூன்று நிலை
  1) ஒன்றில் இணைதல்.
  2) ஒன்று போல் இணைதல்.
  3) ஒன்றால் இணைக்கப் படுதல்.

16. அன்பும் முன்நிலைத் தூண்டுதல் உடையது. [ஒருவரிடம் ஒருவகை அன்புணர்வு தோன்றினால், அவர்க்கு முன் உள்ளவரிடமும் அதற்கிணையான அன்புணர்வைத் தூண்டுகின்றது].

17. மேலிருந்து கீழிறங்கும் தன்மையது.

18. 1] அன்புக்குப் பெண்மை, அடக்கம், தளராமை, நாணம், ஈகம் [இழத்தல் குணம்] காத்தலுணர்வு முதலியன மேனிலைத் துணையுணர்வுகள். இவை அன்பின் எடுத்தல் குணங்கள் எனப்படும்.

2] வெறுப்பு, தன்னலம், மனவெழுச்சி, மிகுவேட்கை, பழியுணர்வு முதலியன கீழ்-நிலைத்துணையுணர்வுகள், இவை அன்பின் படுத்தல் குணங்கள் எனப்படும்.

3) இவற்றுள் எந்த ஓர் உணர்வும் எந்த நிலையிலும் அழிந்து போகாது; ஆனால் அடங்கிக் கிடக்கலாம்.

19. அறிவுக்கு மிகு மேனிலை (Super normal) மெய்யறிவு நிலை.

20. மெய்யறிவு நிலைக்கு முதிர் நிலை (Supernal) தெய்வநிலை,

21. அறிவு,
விலங்கு நிலையிலிருந்து படிப்படியாக வளர்ந்து, மாந்த நிலைக்கும், பின் மேல்மாந்த நிலைக்கும் பின் தெய்வ நிலைக்கும் வளர்ந்து, இறுதியில் இறை நிலையில் போய் இயக்கமற்றிருப்பது. அதன்பின் மீண்டும் இயக்க நிலையெய்திப் படிப் படியாய்த் துலக்கமெய்தி உயிர்நிலைபெற்று மீண்டும் சுழற்சியில் இயல்வது.

22, உயிரற்றும் உயிர்ச்சுழற்சிக் கொண்டும் இயங்கும் எந்த நிலையிலும் தன்னை இழவாத தன்மையுடையது.

23, இயக்கமில் நிலையிலும், இயங்கு நிலையிலும் தன் மூவினையைச் செய்து கொண்டேயிருக்கும். [இயக்க மற்ற ஒரு கல்லுக்கும் தன்னை வெளிப் படுத்தல், காத்தல், நிலைப் படுத்தல் ஆகிய தன்மைகள் உண்டு].

3] இவற்றுள்ளும் எந்த ஓர் உணர்வும் எந்த நிலையிலும் அழிந்து போகாது; ஆனால் அடங்கிக் கிடக்கலாம்.

19. அன்புக்கு மிகுமேனிலை மெய்யன்பு [அருள்] நிலை.

20. மெய்யன்பு நிலைக்கும் முதிர்நிலை [Supernal] தெய்வநிலை.

21. அன்பும் அவ்வாறே சுழற்சி நிலையில் இயங்குவது.

22. அன்பும் அவ்வாறே தன்னை இழவாத தன்மையுடையது.

23. அன்பும் அவ்வாறே இயங்கும்.

24. அறிவு வெளிப்படும் காலத்து இயல்பூக்கச் சூழலாலும் எதிர்வு நிலைச் சிதைவுகளாலும் குறைதல், மிகுதல், சமப்படுதல், அடங்கியிருத்தல் முதலிய வேறுபாடுகளையும் மாறு பாடுகளையும் பெறும்.

24. அன்பும் அவ்வாறே மாறுபாடுகளைப் பெறும்.

25. நிலையானது; அழிவற்றது.

25. நிலையானது; அழிவற்றது.

இதுகாறும் கூறியவாற்றால் அன்பும் அறிவும் இயற்கைத் தாயின் இரட்டைப் பிள்ளைகள் என்றும், இரண்டுமே இயற்கை வடிவாகி அகத்தும் புறத்தும், சுருங்கியும் விரிந்தும், ஒன்றையொன்று பற்றியும் துறந்தும், ஒன்றினுள் ஒன்று அடங்கியும் விரிந்தும், உயிரல் பொருள்களாகவும் உயிர்ப்பொருள்களாகவும், அண்டமாகவும் பிண்ட மாகவும், மண்டிலமாகவும், புடவியாகவும் இடையறாச் சுழற்சியில் உள்ளனவென்றும், அவையே அறியும் பொருளென்றும், அறியப் படும் பொருளென்றும் இரு கூறாகி நிற்கின்றவென்றும், அவை எந்-நிலையிலும் அழிவதே இல்லையென்றும், அவையே இறையென்றும் கடவுள் என்றும் ஒரு பெயராலும், சிவம், உமை என்றும், மால், திரு என்றும், பொருள், ஆற்றல் என்றும் ஈரிணைப்பெயர்களாலும் அழைக்கப்பெறுவன வென்றும், அவையே ஒன்றென்றும்; ஒன்றே இரண்டென்றும் தெற்றெனவும் முற்றெனவும் கண்டு கொள்க.

ஒருசெடி மண்ணிலிருந்து தோன்றி, வெளிப்பட்டு வளர்ந்து மரமாகி, விண்ணளாவிப் பரந்து நின்றாலும், அதன்வேர் அம் மண்ணொடு தொடர்பு கொண்டிருப்பதுபோல்; மாந்தனின் அறி-வுணர்ச்சி அவனை எவ்வளவில் வேறுபடுத்தி வளரச் செய்தாலும், தொடக்க நிலையில் அவன் மலர்ச்சிக்கே அடிப்படையாய் இருந்த அன்புணர்ச்சி அவன் மனத்தொடு பின்னிப் பிணைந்து கொண்டே யிருக்கின்றது.

இனி, அறிவு பொருள் வயத்ததாகலின் அறிவுநிலை உண்மை-களையே மிகக் காணும் அவாவினர், இவ்வுலகைப் பொருள் உலக மாகவும், இதன் இயக்கத்தைப் பொருள் இயக்கமாகவும்; அன்பு ஆற்றல் வயத்ததாகலின் அன்புநிலை உண்மைகளையே மிகக்காணும் அவாவினர், இவ்வுலகை அன்புலகமாகவும், இதன் இயக்கத்தை அன்பியக்கமாகவும் காண்பர். முன்னவர் பொருள் முதல் கருத்து

உடையவர் [Materialist] ஆகவும், பின்னவர் ஆற்றல் முதல் கருத்து உடையவர் [Theocratist] ஆகவும் பிரிந்த கொள்கையராக இயங்குகின்றனர். பொருள் முதல் கொள்கையாளர் இறை நம்பிக்கை யற்றவர் [Atheist] ஆகவும், ஆற்றல் முதல் கொள்கையுடையவர் இறைக் கொள்கையினர் [Theist] ஆகவும் காணப் பெறுகின்றனர். இரண்டு கொள்கைகளும் ஒரே அகப்பாட்டின் இரண்டு புறப்பாடுகளே! உலகை அறிவுணர்ச்சி மட்டும் கொண்டு அறிவது அறிவியல் ஆகும். உலகை அன்புணர்ச்சி மட்டும் கொண்டு அறிவது மதவியல் ஆகும். இருவகை அறிவும் உலகைப் பிரித்தறியும் தன்மையது. அறிவுணர்ச்சி அன்புணர்ச்சி இரண்டையும் கொண்டு உலகை இணைத்தறியும் தன்மையே மெய்யறிவியல் ஆகும். அறிவியலில் ஐன்சுடீனின் ஒப்புமைக்கொள்கை யென்பது புறநிலைகளை இணைத்தறியும் ஒருவகைக் கோட்பாடே! பொருளையும் ஆற்றலையும் அவை சார்ந்த அடிப்படை மனவுணர்வுகளுடன் உலகைக்காணும் ஒப்புமைக் கொள்கையின் வளர்ச்சி இனிமேல்தான் விளங்கித் துலங்குதல் வேண்டும். அதுவே அறிவியலில் மிகுநிலை அறிவியல் [Super science] அல்லது மெய்ப்பொருள் அறிவியல் [Philosophical Science] என்னும் துறையைத் தோற்றுவிக்கும். அக்கால் எல்லாமே ஒன்று, ஒன்றே எல்லாம் எனும் உண்மைநிலை நன்கு மெய்ப்பிக்கப் பெறும். அந்நிலைக்கு நாம் உயர்ந்து விளங்குவோமாக.

[முற்றும்]

'தென்மொழி'

கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

'கழுதை அழுத கதை' அடுத்த இதழில் வெளிவரும்

—அமைச்சர்.

செய்தி தெரியுமா?

நா. எழில்-மகிழ்நன்.

0 இப்போது தமிழ் நாட்டில் 1472 அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 78 பள்ளிகளில் மட்டும் அரசிதழ்ப்பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் பணியாற்றுகின்றனர். அரசிதழ்ப்பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளில் குறைந்தது 1000 மாணவர்களோ அல்லது அதற்கு மேலோ படிக்க வேண்டும். சில மாவட்டங்களில் அத்தகு தகுதியுள்ள பள்ளிகள் மிகச் சிலவே உள்ளன. மாவட்டங்களிலேயே மிகப்பரந்த முகவை (இராமநாதபுரம்) மாவட்டத்தில் ஒரே ஒரு பள்ளிதான் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் பள்ளியாகவுள்ளது. இதே போன்ற தகுதியுள்ள பள்ளி மதுரை மாவட்டத்தில் மூன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டும் உள்ளன. நீலமலை (நீலகிரி) யில் ஒன்றுகூட இல்லை.

0 சென்னையில் **கன்னிமாரா பொது நூலகம்** இருக்கிறது. இந்நூலகம், 1886 முதல் 1890-வரை சென்னை மாநில ஆளுநராயிருந்த **கன்னிமாரா** என்பவரால் தொடங்கப்பெற்றது. முதன்முதல் இந்நூலகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டியவரும் அவரே. இந்நூலகத்தில் இப்போது ஏறத்தாழ இரண்டரை இலக்கம் நூல்கள் உள்ளன. அண்மையில், இந்நூலகத்திற்காக உருபா 12.7 இலக்கம் செலவில், நம் அரசினர் ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டியுள்ளனர். 1972–73 ஆம் ஆண்டில் இந்நூலக வளர்ச்சிச் செலவுக்காக உருபா இரண்டிலக்கத்து, அறுபத்தாறுயிரம் ஒதுக்கப் பெற்றுள்ளது.

0 ஒன்றிய நாடுகளின் செய்தி நிறுவனம் (United States Information Service) சென்னையில் அமெரிக்கன் நூலகம் என்ற பெயரில் ஒரு நூலகத்தை நடத்தி வருகின்றது. படிப்பு ஆர்வம் உள்ளவர்கள் இந்நூலகத்தில் அஞ்சல் வழி உறுப்பினராகலாம். உறுப்பினர் கட்டணம் எதுவும் கிடையாது. நமக்கு விருப்பமான திணைக்களத்தை (Department)த் தெரிவித்தால் அக்களத் தொடர்பான நூல் பட்டியல் நமக்கு வரும். அப்பட்டியலிலிருந்து நாம் விரும்பும் நூல்களைக் குறித்தனுப்பினால் அஞ்சல் வழி உடன் நம்மை வந்தடையும். அங்கிருந்து வர, அஞ்சல் செலவு அவர்களுடையது. ஒரு மாதம் நாம் அந்நூலைப் பயன் படுத்திக் கொள்ளலாம். பின் நம் செலவில் நூலினை அனுப்ப வேண்டும். திருப்பி அனுப்பலில் காலத் தாழ்வு நேர்ந்தால், இயல்பாக உறுப்பாண்மையை நாம் இழந்தவர்களாவோம். இப்படிப்பட்ட செயற்பாடு நம் தமிழர்களுக்கு எந்நாள் வருமோ? அந்நாளே நமக்கு விடியும் பொன்னாள் என்க.

O

முத்துமொழிகள்

தொகுத்தோன் : நா. எழில்-மகிழ்நன்.

0 தன் கடமை என்னவென்பதை உணர்ந்தவன் அறிவாளன்; கடமையை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை அறிந்தவன் திறனாளன்; கடமையை உடன் ஆற்றியவன் நல்லவன்.
-சோர்தான்

0 மற்றவர்களின் கடமைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு முன், யாவரும் தம்முடைய கடமைகளைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டும். -வல்லபாய் படேல்.

0 தெளிவான பேச்சு தூய்மையான உள்ளத்தின் எதிரொலி. ஐயத்திற் கிடங் கொடாமல், கண்டிப்பாகப் பேசக்கூடிய மன வலிமையைத் தூய்மையான உள்ளம் படைத்தவர்களிடமே காணமுடியும். -வில்லியம் லா.

0 அறிஞனாகவும் சான்றோனாகவும் ஆதல் பல நூல்களைப்படிப்பதனாலன்று; சில நூல்களை முறையாகக் கற்பதாலேயேயாகும்.
-பாக்ச்சுட்டர்.

0 எவர் பேசுவதையும் கேட்டுக்கொள். ஆனால் சிலரிடமே பேச்சுக் கொடு; எவர் துன்பத்தையும் தெரிந்துகொள்; ஆனால் உன் கருத்தைக் கூறிவிடாதே. -சேக்சுபியர்.

0 ஒவ்வொருவனும் பிழை செய்யக் கூடியவனே. செய்த பிழையை உணர்ந்து திருந்துபவனே,எதிர் காலத்தில் முன்னேற முடியும்.
-நைட்டிங்கேல்.

0 தாழ்ந்த குறிக்கோளில் வெற்றி பெறுவதைவிட உயர்ந்த கொள்கைக்காகத் தோல்வியுறுவதே ஏற்றது. -பிரௌனிங்.

0 அறிவுரை பனியைப் போன்றது. எவ்வளவு மெல்ல அது பெய்கிறதோ அவ்வளவுக்கு அது நீண்டகாலம் வாழும். மனத்திலும் ஆழ்ந்து உறைந்துவிடும். -கோலரிட்சு.

0 உலகத்தில் மூவகையான ஆட்கள் உள்ளனர். அவர்கள் புதுமை-யையே விரும்பாதவர்கள்; பழமையையே விரும்பாதவர்கள்; இர-ண்டுமே என்னவென்று தெரியாதவர்கள். -சான் ஒயிட்டு.

0 என் மனதிற்கேற்ற நூல்களை மட்டும் கொடுத்து, என்னை என் வாழ்வு முழுவதும் சிறையிட்டாலும் நான் துன்பப்பட மாட்டேன். -மாசினி.

தனித்திறனைப் பெருக்குங்கள்!

தி. குமரப்பன், சாத்தனூர்.

உலகில் பிறக்கும் ஒவ்வொரு மாந்தனுக்கும் இயற்கையிலேயே ஒவ்வொரு துறையில் தனித்திறமை இருக்கும். அவரவர் விரும்பும் திறமையுள்ள துறையைத் தெரிந்து கொண்டு அத்திறனைப் பெருக்க முயன்றால் அவ்வத்துறையில் சிறந்து விளங்கலாம்.

உலகில் எத்தனையோ துறைகள் உள. இசை, நாடகம், ஓவியம், அறிவியல், கணிதம், இலக்கியம், இலக்கணம், பேச்சு, எழுத்து இப்படிப் பல. அவற்றுள்ளும் பல்வேறு பிரிவுகள் உண்டு. காட்டாக இசை என்று எடுத்துக் கொண்டால் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, வாய்ப்பாட்டு இப்படி. அதனுள்ளும் தோற்கருவியை எடுத்துக்கொண்டால் முழவு, மத்தளம், பறை, மதங்கம், "கஞ்சிரா" எனப் பலவகை உண்டு. எனவே துறைகள் எண்ணிறந்தன. இவற்றுள் தத்தமக்கு விருப்பமான, தன் திறமைக்கு ஏற்ற ஒரு துறையைத் தேர்ந்துகொண்டு அததுறையில் சிறக்க முயல வேண்டும். துறையைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர், பெற்றோர் உதவியை நாடல் நலம்.

அப்படி இயற்கையிலேயே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் தனித்திறமை இருக்கத்தான் செய்யுமா? இல்லாமலும் இருக்கலாம் இல்லையா? என்று கேட்கலாம். என்னைப் பொறுத்தவரை இருக்கும் என்றுதான் நம்புகிறேன். ஒருவன் ஒரு தனித்தன்மையும் இல்லாது முரடனாகவும் சுட்டியாகவும் இருக்கலாம். அவனையும் கூடப் படைத் துறைக்கு அனுப்பினால் அங்குச் சிறந்து விளங்குவான். அப்படியே எல்லாருக்கும் இயற்கையில் தனித்திறமை இருக்காது என்று கொண்டாலும் தாழ்வில்லை. உங்கட்கு விருப்பமான துறையைத் தேர்ந்து கொண்டு அதில் "எனக்குத் தனித்திறமை இருக்கிறது—இருக்கிறது" என்று உள்ளத்தில் உறுதியாக எண்ணிக் கொண்டு அத்துறையில் முன்னேற முயலுங்கள். தனித்தன்மை தானாக வந்து விடும். இதில் ஐயமே வேண்டா.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்

என்றும்,

உன்னியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உன்னியது உன்னப் பெறின்

என்றும், ஈரிடத்தும் "பெறின்" என்று கூறுகிறார் வள்ளுவர்; திண்மையாக எண்ணுதல் அவ்வளவு எளிதன்று என்பதைக் காட்டுதற்காக. உங்கட்கு அந்தத் திண்மை கைவரப் பெற்றால் நீங்கள் விரும்பும் துறையில் உறுதியாகச் சிறந்து விளங்குவீர்கள். உள்ளத்தில் உறுதியுடன் உழையுங்கள். "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" முயலுங்கள்! வெற்றி உங்கட்கே!!

துள்ளியெழு!

தரங்கை பன்னீர்ச்செல்வன்.

அருமைத் தமிழ்மகனே! அன்பார் குலவிளக்கே!
பெருமை தருஞ்சுடரே! பிழையா இனமுரசே!
எருமை பயிர்வயலுள் இறங்கி அழிக்கிறதே!
திருமை சிதையுமுனே திறவாய் விழிமலரே! (1)

ஒளிரும் கதிரொளியே! உணராத் தமிழினத்துப்
பிளிறுங் கதக்களிறே! பின்னும் வயற்களையைத்
துளிரிற் களைதற்குத் தக்கதாம் இப்பொழுதே!
குளிரிற் கயராமல் குதித்தே எழுந்திடுவாய்! (2)

நெருங்குந் தேர்வுக்கு நெடுந்துயில் பகையென்றே
கருங்குயில் கூவிடுமால்! காக்கை கரைந்திடுங்காண்!
அருங்குணச் செந்தமிழே! அடலார் அரிமாவே!
மருங்கெழில் பொங்குவிழி மணிச்சிமிழ் திறந்திடுவாய்! (3)

மாய வலைவீழ்ந்து, 'மநுமை' மருந்துண்டு,
தூய தமிழத்துத் தொன்மைச் சிறப்பிழந்தே
ஆய அறிவின்றி அலையும் உன்னினத்தைப்
பாயல் விடுத்தெழுந்து பண்படுத்த முன்னெழுவாய்! (4)

படுகொலைப் படுவதனைப் பழக்கம் என்பார்க்கும்
விடுதலை உணர்வூட்டும் வேந்தராம் நம் பெரியார்
'கொடு, தலை!' என்றிடுமுன் கொடுத்துத் தமிழகத்தை
விடுதலை செய்திடற்கே விரைந்தே எழுந்திடுவாய்! (5)

மூவாச் செழுந்தமிழை மூத்த முதன்மொழியைத்
தாவார் ஆரியத்தார் தாழ்த்தா மற்பேணும்
பாவாணர் என்னும் பரிதி சுடர்கையிலே
ஏவா இளமகவே இன்னும் உறங்கிடவோ? (6)

வேங்கடத் துக்கப்பால் விரியா அறிவினரும்
ஓங்கி யுரைக்கின்ற ஒருமை நெடும்பாட்டின்
பாங்கினை (?) எடுத்தோதும் பாவரிபெருஞ் சித்திரனுர்
தூங்கும் உனைக்கண்டு 'தூ'எனுமுன் துள்ளியெழு! (7)

மக்கள் நலம்நாடும் மாண்பார் அருட்செல்வர்
தக்க அதிகாரம் தந்திடத் தயங்குதில்லிக்
கொக்கரிப் படக்கிடற்குக் கூவி அழைக்கின்றார்,
முக்கா டகற்றிவிட்டு முந்தி எழுந்திடுவாய்! (8)

தேனீக்களின் "மொழி"

டி. பாவ்லோவு

"இந்தத் தேனீக்கள் இத்தாலிய மொழியைப் பேசுகின்றன" எனவே சியார்சிய அல்லது உக்ரேனியத் தேனீக்கள் இருக்கும் கூட்டிற்கு இவை சென்ருல், அந்த ஈக்களால், இந்தத் தேனீக்கள் 'கூறுவது' எதையும் விளங்கிக்கொள்ள முடியாது, என்று தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கூட அறிஞராகிய எவ்கெனி எசுக்கோவு என்னிடம் கூறினர். மாசுக்கோவிலிருந்து 150 அயிர் மாத்திரை (கிலோ-மீட்டர்) தொலேவிலுள்ள ஒரு சிறிய நகரில் இந்த ஆராய்ச்சிக் கூடம் நிறுவப் பெற்றுள்ளது.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சிப் பாவேந்தர் பொய்யாப் புலக்குழந்தை
இருட்சிறைப் போந்தே இனங்காத்த அறிஞரண்ணு
மருட்சி மீதூற மறைந்து போயினரால்
தெருட்டுவார் இல்லையெனத் தீதாய்க் கருதுவதோ? (9)
காதின் பறைகிழியக் கன்னித் தமிழினேயர்
தோதாய்ப் பகையழிக்கத் துள்ளித் திரளுமொலி
ஏதும் உணரான்போல் இன்னும் ஏமாற்றல்
போதும் புலமகனே பொரிசுடர் விழிதிறவாய்! (10)
(உறங்குகின்ற மைந்தனே எழுப்பும் அன்னேக் கூற்று)

கிழமைகள்.

க. க. ஆறுமுகம்.

ஞாயிற்றுக் கிழமை பிறந்தவன் நான்;
ஞயம்பட என்றும் உரைத்திடுவேன்!
திங்கட் கிழமை பிறந்தவன் நான்;
தங்கம் கிடைப்பினும் பொய் சொல்லேன்!
செவ்வாய்க் கிழமை பிறந்தவன் நான்;
செந்தமிழ் மொழியைப் போற்றிடுவேன்!
அறிவன் கிழமை பிறந்தவன் நான்;
ஆசான், அறிஞனை வணங்கிடுவேன்!
வியாழக் கிழமை பிறந்தவன் நான்;
விழிப்புடன் என்றும் செயல்படுவேன்!
வெள்ளிக் கிழமை பிறந்தவன் நான்;
வெற்றி ஒன்றே விரும்பிடுவேன்!
காரிக் கிழமை பிறந்தவன் நான்;
கன்னித் தமிழை வளர்த்திடுவேன்!

"அண்மைக்காலம்வரை, தேனீக்கள் செவிடு; அவற்றிற்கு காது கேட்பதில்லை என்றே அறிவியலறிஞர்கள் கருதி வந்தனர், செய்திகளை அறிவிப்பதற்கு அவை நடன முறையையே கடைப் பிடிக்கின்றன என்றுதான் பொதுவாகக் கருதப் பட்டு வந்தது", என்றார் அவர்.

எனினும் செய்திப் பரிமாற்றத்திற்குத் தேனீக்கள் ஒலியைப் பயன்படுத்துகின்றன என்று எசுக்கோவின் தலைமையில் இயங்கும் இந்த ஆய்வுக்கூடம் மெய்ப்பித்துள்ளது: தேனிருக்கும் இடம் எந்தத் திசையிலுள்ளது என்பதை அறிவிப்பதற்குத்தான் தேனீக்கள் "நடன" முறையைப் பின்பற்றுகின்றன; ஆனால், எவ்வளவு தொலைவு செல்ல வேண்டும் என்னும் செய்தியை அவை ஒலியின் மூலமாகவே தெரிவிக்கின்றன. நீண்ட நேரம் ஒரு தேனீ 'பாடினால்' தேன் இருக்கும் தொலைவு மிக அதிகம் என்று பொருள். தேனீக்களின் ஒலியைப் பாடல் குறியீடாக அமைத்து ஒரு சிறப்பு வரைபடம் உருவாக்கப்பெற்றது. இந்த ஆய்வுக் கூடத்தில் பலமுறை செய்யப் பட்ட ஆய்வுகளில் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

உணவிருக்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தனது கூட்டிற்குப் பறந்து வந்த தேனீ, ஒரு வட்டமாகச் சுற்றிச் சுற்றி வருகிறது; அதே நேரத்தில் அது "பாடவும்" செய்கிறது. சிறிது நேரம் அது பாடி முடித்த பின் அமைதியாக இருக்கிறது. உடனே பதிவு செய்யப்பட்ட அந்தத் தேனீயின் பாட்டை, ஒரு நாடாப் பதிவான் (Taprecorder) தொடர்ந்து ஒலித்தது. நாடாப் பதிவானின் ஒலியைக் கேட்ட அந்தக் கூட்டிலுள்ள தேனீக்கள், உடனே உணவு இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தன. குறிப்பிட்ட கூட்டிலுள்ள தேனீக்கள்தாம் அந்த இடத்தை அடைகின்றன என்பதைத் தெரிந்துக் கொள்வதற்காக, அந்த ஈக்களுக்குச் சிறப்பு அடையாளங்-கள் இடப்பட்டிருந்தன. பல்வேறு வகையான தேனீக்கள் வேறுபட்ட அதிர்வுகளில் ஒலி எழுப்புகின்றன. அதனால்தான் வேறுபட்ட பகுதிகளிருந்து வரும் தேனீக்கள் ஒன்றை ஒன்று உணர்ந்து கொள்ள முடியவில்லை.

தேனீக் குடும்பத்தின் இந்தச் செய்திப் போக்குவரத்து மொழியை நன்றாக உணர்ந்து கொண்டால், அவற்றுடன் மாந்தன் சில தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது இயல்வதே! அவற்றிற்கான உணவு இருக்குமிடத்திற்கு, அவற்றை நாமே செலுத்துவது எளிதாகும். வெப்ப நிலை ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்றாற்போலும், தேனீக்கள் குறிப்பிட்ட அதிர்வுகளில் ஒலி எழுப்புகின்றன; அரசி ஈயை இழந்து விட்டபோதும் அவை ஒரு குறிப்பிட்ட ஒலியை எழுப்பும். இந்த ஒலிக் குறியீடுகளனைத்தையும், பதிவு செய்து வைத்து, அவற்றை நாம் நன்றாக உணர்ந்து கொண்டால், செயற்கை ஒலிகளின் வழி அவற்றிற்கு நாம் உதவ முடியும். O

பெரியோர் வரலாறு.

பாருகூபைனேசா

இறை-மகிழ்நன்

மிகவும் எளிமையான, அன்பான, அப்பழுக்கற்ற, தூய வாழ்வே பாருசு பைனேசா (Baruch Spinoza)வின் வாழ்வாகும். இவர் ஒரு மருத்துவரும், சிறந்த மெய்யறிவாளரும், பகுத்தறிவாளரும் ஆவார். இவர் ஆம்சர்தாம் நகரில் ஓர் யூத மதத்தைச் சார்ந்த பெற்றோர்களுக்கு, 1632-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 24-ஆம் நாள் பிறந்தார்.

ஒரு நாள், ஒரு பெண்மணியிடம் இருந்து தமக்கு வரவேண்டிய கடனைத் தண்டிவருமாறு, பைனேசாவை அவர் தந்தை அனுப்பினார். அப்பெண்மணியோ தன்னை ஒரு செல்வக் குடும்பத்தினளாகக் காட்டிக் கொண்டு, பணத்தைக் கொடுக்காது அவரை ஏமாற்றிட நினைத்தாள். இந்நிகழ்ச்சியே போலி வாழ்வு வாழும் மாந்த இனத்தின்மேல் பைனேசாவுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

பொய்யையும், போலித் தனங்களையும், மூடநம்பிக்கைகளையும் தகர்த்தெறியும், அறிவுக் கூர்மையான கேள்விக் கணைகளை மதத் தலைவர்களை நோக்கி அவர் தொடுத்தார். மதத் தலைவர்கள் அவருக்குக் கிறித்தவக் கோவில்களில் வழிபாடு செய்யத் தடை யிட்டனர். குமுகாயக் கூட்டத்தினின்றும் அவரை விலக்கி வைத்தனர். அவருக்கு எவரும், எவ்வகை உதவியும்செய்யக் கூடாது என்று தடை போட்டனர். பைனேசாவுடன், உரையாடவும், மடல்கள் விடுக்கவும் கூட மற்ற மக்கள் அஞ்சினர். ஏனெனில், குமுகாயத்தினின்று விலக்கப்பட்டவரோடு தொடர்பு கொள்வது அக்காலச் சட்டத்திற்குப் புறம்பான செயலாகும். "இடுக்கண் வருங்கால் நகுக" என்பதற்கேற்ப, அடுத்தடுத்து வந்த அனைத்துத் துன்பங்களையும் பைனேசா அமைதியாக ஏற்றுக் கொண்டார். அவரது அமைதியான போக்கும் கூட யூதர்களுக்கு எரிச்சலூட்டியது. ஆகவே அவரைக் கொன்று விடவும் துணிந்தனர். தம்மைக் காத்துக்கொண்டு இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டாய் வாழ விரும்பிய பைனேசாவுக்கு, டச்சு நாட்டைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் புகலிடம் அளித்தார். அம்மருத்துவருக்கு உதவியாக இருந்து மருத்துவக் கலையை நன்கு கற்றுத்தேர்ந்தார்.

பின்னர், தம் வாழ்க்கைச் செலவுகளைச் சரிகட்ட, நுண்ணோக்கி (Microscope), தொலைநோக்கிக் (Telescope) கருவிகட்குத் தேவைப்

படும் ஆடிகள் செய்யும் தொழிலைக் கற்றுத் தேர்ந்தார். மேலும், இவ்வுலகைப் பற்றிய உண்மையை ஆராய்வதிலும், பல அறிவு நூல்களைப் படிப்பதிலுமே மிகுதியான நேரத்தைச் செலவிட்டு வந்தார். மெய்யறிவியலிலும் (Philosophy) மருத்துவத் துறையிலும் வல்லுநர் ஆனுர். மருத்துவம் பயிலும் மாணவர்களும், உண்மையை அறிய விரும்பிய மெய்யறிவியல் ஈடுபாட்டாளர்களும், பைனேசாவைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர். அன்று குமுகாயத்திலிருந்து விலக்கி, விரட்டியடித்த உலகம், பின்னர் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டது. தம்முடைய எதிரிகளாலும், விரும்பப்படும் அன்புக்குரிய நண்பராக விளங்கினுர், பைனேசா. தூய எளிய வாழ்வையே அவர் மிகவும் விரும்பி வாழ்ந்தார். பகட்டான பொருள்களை அவர் ஒரு நாளும் விரும்பியதில்லை. பைனேசாவின் அறிவாற்றலை மதித்து அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் அவருக்கு 400 பொற்காசுகள் (உரு. 2000) அன்பளிப்பும், ஓய்வூதியமாக திங்கள் தோறும் 85 பொற்காசுகளும் (உரு. 400) அளிக்க முன் வந்தார். பைனேசா அத்தொகையை வாங்க மறுத்து, அந்நண்பரின் இளவலின் பெயரில் அத்தொகைக்கு இறுதிமுறியொன்று எழுதுமாறு தூண்டினுர். இடைவிடாத வேண்டுகோளுக்குப் பிறகு 50 பொற்காசுகள் (உரு. 250) மட்டுமே பெற்றுக்கொண்டார். அவருடைய பண்புக்கும், எளிமைக்கும் இஃதோர் எடுத்துக்காட்டாம்.

தாம் எழுதிய நூல்களில் சிலவற்றை 14-ம் உலூயி மன்னருக்குப் படையலாக்கினுல், அவருக்கு மிகப் பெரிய தொகையொன்றை ஓய்வூதியமாக வழங்கிட அரசினர் முன்வந்தனர். தன்மானம் மிக்க பைனேசா இதையும் அமைதியாக மறுத்துவிட்டார். பின்னர் அவரது அறிவின் திறம் கண்டு வியந்த ஐதல்பெர் (Hydelberk) பல்கலைக் கழகத்தார் (சிக்கலுக்குரிய கருத்துகளை மட்டும் மாணவர்களுக்குப் புகட்டாமல் இருக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்துடன்) அவருக்கு மெய்ப்பொருள் பேராசிரியர் பதவி அளிக்க முன் வந்தனர். தம் எண்ணத்திற்கு மாருகவும், தன்மானத்திற்கு இழுக்காகவும் வந்த இப்பதவியையும் அவர் ஏற்க மறுத்தார். தன்மானத்தோடு கூடிய, எளிய, எடுத்துக்காட்டான வாழ்வை விரும்பிய அவருக்கு இப்பதவி ஒரு பொருட்டாகுமா?

தாம் பசியால் வாடியபோதும், தமக்குக் கிடைத்த உணவைப் பசியுற்ற பிற ஏழைமக்கட்கு அளித்துவிடும் பண்பாளராய் அவர்

விளங்கினுர். தமது குறைந்த வருவாய்க் கேற்ப, தன்ஞல் முடிந்த அளவு, பிறருக்கும் பொருள் வழங்கும் வள்ளன்மை உள்ளம் கொண்டவராய் அவர் திகழ்ந்தார்.

இறுதியில் தம் 44-ஆம் அகவையில் என்புருக்கி (Tuberculosis) நோயால் துன்பப்பட்டு இயற்கை எய்திஞர். பண்புக்கும், அன்புக்கும் மாந்த வியல்புக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர், இறக்கும் தறுவாயில் தாம் எழுதிய நூல்களையெல்லாம் தம்முடைய பெயரைப் பொறிக்காமல் வெளியிடுமாறு வேண்டிக்கொண்டார்.

அறிவுக் கூர்மையான அவருடைய கேள்விகளுக்கு விடைகூறி விளக்க முடியாமல், மூடநம்பிக்கையில் சிக்கிச் சீரழிந்து, அவரைக் குமுகாயத்தினின்று விரட்டியடித்த அதே உலகம், பிற்றை நாட்களில் அவரைத் தேடிச் சென்று பெருமைப்படுத்த விரும்பியது. இத்தகையதான இவ்வுலகின் இயல்புதான் எவ்வளவு வியப்புக்கும், அதே நேரம் பகடிக்கும் உரியதாய்த் திகழ்கின்றது பாருங்கள்! O

O சிறுவர்களே சிறுமியர்களே!

உங்களுக்கான முத்துப் பாடல்கள்! 0
உங்கட்கு உணர்வூட்டுவன! 0
உள்ளத்திற்கு ஒளியூட்டுவன! 0

0 தமிழ்ச்சிட்டில் வெளிவந்த
பாடல்களின் தொகுப்பு நூல்!

0 அமிழ்தப் பேழை!

ஏராளமான எழிற்படங்கள் நிறைந்த நூல்
வெளி வந்து விட்டது!
விலை: 3-50
பதிவஞ்சல் செலவு: 1-25

பள்ளிப் பறவைகள்

(முதல் தொகுப்பு)
கிடைக்குமிடங்கள்:

வள்ளுவர் நூலகம்
19, இலட்சுமிநாயக்கன் தெரு,
இராசிபுரம் (அ.நி) சேலம் மாவட்டம்.

ஆசிரியர்:
தென்மொழி
கடலூர்-.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	4-50	6-00
தனியிதழ் ,,	0-25	0-35	0-50

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஒரிதழுக்கு 50 காசு மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

பன்னாட்டுப் பழமொழிகள்!

0 குற்றம் என்ற புற்றில் கையை விட்டால், சட்டம் என்ற பாம்பு கடிக்கத்தான் செய்யும்.

0 குற்றத்தை ஒப்புக் கொள்வது நேர்மையின் முதற்படி.
—சப்பான் பழமொழி.

0 கலியாணம் என்பது தும்மல் போன்றது; அது யாருக்கு, எப்பொழுது வரும் என்று சொல்ல முடியாது.

0 பேசாத பேச்சுக்கு நீ அதிகாரி; பேசிய பேச்சு உனக்கு அதிகாரி.
—ஆங்கிலப் பழமொழி.

0 ஒழுக்கம் இரவலன் உருவிலே இருந்தாலும் சிறப்பிக்கப்படும்.
—செருமானியப் பழமொழி.

0 தன்னைத்தான் புகழ்ந்து கொள்பவன் ஒரு முட்டாள்; தன்னைத் தான் இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்.
—இடேனிசுப் பழமொழி.

0 இன்றையநாள் நம்கையில்தான் இருக்கிறது; நாளை நடப்பது இறைவனிடம் உள்ளது.
—பிரெஞ்சுப் பழமொழி.

0 முடியாது என்று கூற முடியாதவன் விரைவில் ஏழையாகி விடுவான்.
—இசுக்காத்துலாந்துப் பழமொழி.

0 மரத்தடியில் ஆளில்லாத போதுதான் ஆண்டவன் தேங்காயை விழச் செய்கிறான்
—அரேபியப் பழமொழி.

0 கோழிகூட தண்ணீர்ப் பருகும் போது வானை நோக்குகிறது.
—துருக்கியப் பழமொழி.

0 இறைவனை வழிபடும் போது நகைகளைக் கட்டிக் கொள்கிறாய் அப்போது இறைவன் தம் கரங்களை நீட்டிக் கொண்டிருக்கிறான்.
—செருமானியப் பழமொழி.

0 ஆகூழும் போகூழும் ஒரே கிணற்றில் தொங்கும் இரு வாளிகள் ஒன்று மேலே வந்தால், ஒன்று கிழே போகும்.
—டென்மார்க்குப் பழமொழி.

0 மாந்தன் பிறக்கும்போது, அவன் அழுகிறான் மற்றவர்கள் சிரிக்கிறார்கள். அவன் இறக்கும் போது சிரிக்க வேண்டும். மற்றவர்கள் அழவேண்டும்.
—பாரசீகப் பழமொழி.

0 இன்பவுலகிற்குப் பாதை இருக்கிறது. ஆனால் யாரும் அதில் செல்வதில்லை. துன்பவுலகிற்குப் பாதை இல்லை. ஆனால் மாந்தர்கள் அதில் ஏறிக் குதிக்கிறார்கள்.
—சீனப் பழமொழி.

0 உப்புவிற்றால் மழைபெய்கிறது; மாவுவிற்றால் காற்றடிக்கிறது.
—சப்பானியப் பழமொழி.

0 இன்பம் சிற்றோடையாக வந்தால், துன்பம் காட்டாறாக வரும்
—அயர்லாந்துப் பழமொழி.

தமிழ்ச் சொல் வளம்

தொகுதிப் பெயர்:

அம்பலம்: Village Assembly; அவை: Audience.
அவையம்: Jury; ஆசிடை: Association.
ஆயம்: Assembly; இல் அல்லது இல்லம்: House.
கடிகை: Village Council; களம்: Field.
கணம்: Society, host, body; கழகம்: Academy.
களரி: Institute; குழு: Faction, Cemmittee;
குழூஉ: Class; குழுமம்: Guild; குழாம்: Group.
குழும்பு; Company; கும்பு: Gang; கும்பல்: Crowd.
குறி: Village Council; பெருங்குறி: Village Assembly.
கூளி: Multitude; கூட்டம்: Meeting, gathering;
திரள்: Mass; தொழுதி: Herd, Flock;
தொகுதி: Set, Aggsegation; தொகை: Collection, Sum.
நெருள்: Big crown; பண்ணை: Farm, a bevy of ladies.
பொதியில்: Public Hall; மக்கள்: People;
மந்தை: ஆனிரை; மானிரை.
மன்று, மன்றம்: பொதுவிடம், அம்பலம், அறங் கூறவையம்.
மாந்தர்: Human beings.
மன்பதை: Humanity, Mankind; வகுப்பு: Class.
தானை, சேனை: Army.
படை: Division, Force.
பஞிலம்: Company.
கணகம்: Batralion.
மன்பதை: Regiment; தண்டு: Troop.
தார்: போர்ப்படையின் முன்னணி.
கூழை: போர்ப்படையின் முன்னணி.
தூசு, தூசி: கொடி தாங்கிச் செல்லும் கொடிப்படை.

(பாவாணர்-சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)

தொடர்: 9

கிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர்த் தொடர்ச்சி:

கிறித்துவப் பெயர்.	எந்த மொழி.	அதன் பொருள்.	அதற்கேற்ற தமிழ்ப் பெயர்.
கார்டினர் Gardiner.	தியுத்தானியம்.	மலர்விரும்புபவன்.	மலர்வேட்டன்.
காரிக்கு Garrick.	,,	திறல்மறவன்.	திறலோன். மறவன்.
கார்வின் Garvin.	,,	படைத்துணைவன்.	படைத்துணை.
சியோஃப்ரே Ceoferey	,,	இறைவனின் அமைதி.	இறையமைதி. தேவமைதி.
சியார்சு George	கிரேக்கம்.	உழவன். வேளாண்மை செய்வோன்.	ஏரன். உழமகன்.
செரால்டு Gerald.	தியுத்தானியம்.	மறவோன். படைஞன்.	மறவன். படைஞன்.
கில்பர்ட் Gilbert	,,	தகுதியான பிணைபேன்.	தகுபிணை.
குட்வின் Goodwin	,,	நன்றியுள்ள நல்ல நண்பன்.	நற்றுணை. நன்றியன்.
கார்டன். Gordon	ஆங்கிலோ சாக்சன்.	மலைப்புறத்தவன்.	குன்றன் மலையன்.
கிரகம் Graham	தியுத்தானியம்.	சாம்பல் நிற வீட்டினன்.	வெண்- காரில்லன்.
குரோவர் Grover	ஆங்கிலோ சாக்சன்.	குகை வாழ்நன்.	புழைஞன்.
ஆமில்டன். Hamilton	பிரெஞ்சு.	ஆம்லெட் மலைவாழ்நன்.	மலைஞன். மலையன்.
அரால்டு Harold	ஆங்கிலோ சாக்சன்.	படைத் தலைவன்.	படைத்தலை. தானைத்தலை.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.